**தேசிய வடிவமைப்பு நிலையம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

--------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டது. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கல்லூரி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு

“சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர்கள், தேசிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்படுவது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே குறிப்பிட்ட தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 70 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் திரவத்தன்மை ஒழுங்கு முறைப்படி சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடு ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) பெற்றிக் கைத்தறிப் புடவை மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் மூலம் “புதிய வடிவமைப்பு சேலை 100” என்ற பெயரில் பெற்றிக் வடிவமைப்பு சேலைகளை உருவாக்குவதற்கான செயற்திட்டத்திற்காக தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு ரூபா 03 மில்லியன் தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட காசோலை 2021 சனவரி மாதத்தில் நிலையத்திற்கு கிடைத்திருந்தது. உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக சலுசல நிறுவனத்துடன் 2021 சனவரி 27 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 06 இன் பிரகாரம் இது நிதிக் கூற்றுக்களில் | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் அளவிற்கு உறுதியான மற்றும் நிரந்தரமான நிலைமையானது இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் காணப்படாததனால் அந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடப் படுகின்ற திகதியில் காணப்பட்ட நிலைமைக்கு சான்று வழங்கும் சம்பவம் என்பதனால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையிடப்படுகின்ற நிலைமைக்கு சான்று வழங்கும் சம்பவமாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழ் காலப்பகுதி தொடர்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமிக்குமிடையேயான ஒப்பீடானது மேலதிக செலவு நிரலாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் ஒவ்வொரு செலவுக்குமுரிய பாதீட்டுப் பெறுமதியானது சமர்ப்பிக்கப்படவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாட்டினை ஏற்றுக் கொள்வதுடன் அடுத்து வரும் ஆண்டுகளில் சரியாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 2,495,693 தொகையான பெற வேண்டிய மீதியினுள் உள்ளடக்கப்பட்ட அறவீடு செய்தல் சந்தேகத்துக்குரிய மீதிகளுக்காக நட்டப் பெறுமதிகள் கணிக்கப்பட்டு நியாயப் பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து 2.5 சதவீதம் அல்லது பொருத்தமான சதவீதத்தில் ஐயக் கடனுக்காக ஒதுக்கீடு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு 2021 கணக்காண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | ஐயமான மீதிகளுக்காக நட்டப் பெறுமதிகள் கணிக்கப்பட்டு நியாயப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மீளாய்வு அறிக்கையின் | இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது இயந்திரங்கள், அலுவலக | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் கட்டிடங்களைத் தவிர்த்து ஏனைய நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 62,566,825 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க அந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 78,965,697 ஆக இருந்ததனால் ரூபா 16,398,872 தொகையான விளக்கமளிக்காத வித்தியாசம் காணப்பட்டது. | உபகரணங்கள், தளபாடமும் பொருத்திகளும் என்பவற்றுக்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்காமையும் அகற்றப்பட்ட சொத்துக்களை ஏடுகளிலிருந்து நீக்கப்படாமையுமாகும். 2020 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் வகுதிகளுக்கு இணங்க மீள் மதிப்புச் செய்து பதிவேட்டினை மேலும் நாளதுவரையாக்குவதன் மூலம் இந்த வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துணைப் பதிவேட்டிற்கு மிடையேயான வித்தியாசத்தை இனங்கண்டு சொத்துக்களை மீள் மதிப்புச் செய்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் இலங்கை கைப்பணிகள் சபையிடமிருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 513,115 மீதி காட்டப்பட்டிருந்த போதிலும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 587,250 ஆக இருந்ததனால் ரூபா 74,135 வித்தியாசமும் தேசிய கைப்பணிகள் சபையிடமிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 64,006 மீதியும் காட்டப்பட்டிருந்தும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் செலுத்த வேண்டிய பெறுமதி இருக்கவில்லை. | ரூபா 74,135 தொகையான வித்தியாசத்திற்குரிய காரணம் தேடிப் பார்க்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிலையத்தினால் காலக் கழிவினைக் கணிக்கும் போது திறைசேரி நிதியிலிருந்து கொள்வனவு செய்த சொத்துக்களைப் போல உழைத்த | உழைத்த நிதியிலிருந்து கொள்வனவு செய்த சொத்துக்களுக்காகவும் தவறுதலாக காலக்கழிவு கணித்ததனாலான தவறை ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதிகளைக் கணித்து கணிப்பீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நிதியிலிருந்து கொள்வனவு செய்த சொத்துக்களுக்காகவும் காலக்கழிவு கணித்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது பிற்போட்ட வருமானங்கள் ரூபா 458,037 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இதற்கிணங்க எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையினால் நிதிப் பிரமாணம் திருத்தியதற்கு இணங்க நிதிப் பிரமாணம் 371(5) | உப கட்டுநிதிகள் வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாடுகளை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியை மீண்டும் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் முற்பணங்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களின் மூலம் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு 6 நாட்களிலிருந்து 96 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | மார்ச் ஏப்ரல் மாதங்களில் காணப்பட்ட அவசரகாலச் சட்ட நிலைமையின் அடிப்படையில் மற்றும் ரோஸ்டர் முறைமையில் சேவைக்கு அழைத்ததன் காரணமாக முற்பணங்களைத் தீர்த்து வைத்தல் தாமதமடைந்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வு செய்த கணக்குகளுடன் ஆண்டறிக்கை மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | | |
| (இ) | நிதிப்பிரமாணம் 105 மற்றும் 109(1) மற்றும் 109(2) | 2 வாகன விபத்துக்கள் தொடர்பான ரூபா 65,991 மொத்த தொகையான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறு நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஏடுகளிலிருந்து நீக்கும் கட்டளை அல்லது கைவிடும் கட்டளை பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பணத்தை பதிவழித்தல் இடம் பெற்றிருக்காததுடன் அறவிட வேண்டிய பணமாக ஏடுகளில் பதியப்பட்டுள்ளது. மற்றும் எதிர்காலத்தில் விசாரணைகளை நடாத்தி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,045,574 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,288,623 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 2,756,951 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மொத்த வருமானம் ரூபா 11,480,781 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய அலுவலகக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2020 | புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கையை | காணிகளின் சட்ட ரீதியான உரிமை பொறுப்பேற்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,867,031 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் தலைமை அலுவலகம் செயற்பட்டு வருகின்ற கடுபெத்தையில் அமைந்துள்ள காணியினதும் செயற்திட்ட அலுவலகம் அமைந்துள்ள நத்தரம்பொத காணியினதும் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது. | ஆரம்பிக்கும் போது இக்கட்டிடத்தின் சட்டரீதியான உரிமையையும் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் பொறுப்பேற்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் தொடக்க நடவடிக்கைகள் அனைத்தும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது காணியின் திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டு நில அளவையாளர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் நத்தரம்பொத செயற்திட்ட அலுவலகம் அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புதிய அலுவலக கட்டிடத்தனை நிர்மாணிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாகாண பசுமைச் சான்றிதழினைப் (Provincial Green Certificate) பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாக இருந்த போதிலும் அச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாது நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டில் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு பசுமைச் சான்றிதழுக்காகவும் வேண்டுதல் செய்யப்பட்டதுடன் இப்பசுமைச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கட்டிடத்தின் ஆலோசனைகள் கம்பனியான பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சட்டரீதியான தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிட நிர்மாண தேசிய டிப்ளோமா, கட்டிட நிர்மாண உயர் தேசிய டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 90,000 வீதம் கட்டணங்களை அறவீடு செய்தல் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2018 ஒக்தோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட கட்டிட நிர்மாண உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியை 2020 ஏப்ரல் மாதத்தில் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை அக்கற்கை நெறியின் இறுதிப் பெறுபேறு வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்கற்கைநெறிகளுக்காக 2021 ஆம் ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் இடம்பெற்றிருக்க வில்லை. கற்கை நெறிகளை மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்தல் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதி இடம்பெற்றிருந்த போதிலும் பதிவு செய்து 07 ஆண்டுகள் கடந்தும் NVQ மட்டத்திற்கு உயர்த்துவதற்கு இன்று வரை முடியாதிருந்தது. இதன் காரணமாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழானது துறையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் பெறுமதிமிக்கதான சான்றிதழாக இல்லாததுடன் உறுதியாக கற்கைநெறி பூர்த்தி செய்யப்பட்டமைக்கு பணிப்பாளரின் மற்றும் தலைவரின் கையொப்பத்துடன் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் மாத்திரமாக இருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது NVQ 5 மட்டத்திற்கு உயர்த்துவதற்கான ஆரம்பத் திட்டங்களைத் தயாரிக்கும் போது விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததனால் விரிவுரை மற்றும் நிருவாகக் கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக ரூபா 90,000 ஆக கற்கை நெறிக் கட்டணங்கள் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் திருத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதற்கு காலம் எடுத்துள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளை மே மாதம் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு நிறுவனத்தின் இணையத் தளத்தினூடாக 256 மாணவர்கள் வேண்டிக் கொண்டிருந்ததுடன் நேர்முகப் பரீட்சையை நடாத்தி 44 மாணவர்கள் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள் மற்றும் இக்கற்கை நெறியை NVQ | கற்கை நெறிக் கட்டணங்களை அறவீடு செய்வது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அதேவேளை கற்கை நெறியின் தரத்திற்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மட்டத்திற்கு தயார்படுத்துவதற்கான தொடக்க நடவடிக்கை களானது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து தற்பொழுது பாடவிதானங்களின் தொடக்க நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது. | |

**3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய வடிவமைப்பு நிலையமானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து 2014 திசெம்பர் 08 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், மொனறாகலை, புத்தளம், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் நுட்பவியலாளர்கள் குழுக்களின் தொழில்நுட்ப இயலுமையினை அபிவிருத்தி செய்வதற்கும் ஆலோசனை உதவிகளை வழங்குவதற்காகவும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 51,313,305 தொகையான நிதி ஏற்பாட்டினை வழங்கியிருந்தது. UNDP நிறுவனத்தினால் 2018 சனவரி 15 ஆந் திகதி வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப் பட்டுள்ளவாறு 2018 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் இறுதி செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டம் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் மிகுதியாகவிருந்த ரூபா 2,312,228 | கொவிட் நிலைமையின் காரணமாக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்று செயற்திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பணம் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொவிட் அச்சுறுத்தலின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு முடியாதிருந்த பெற்றிக் வடிவமைப்பு உருவாக்கல் கண்காட்சியை 2021 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2020 திசெம்பர் 31 ஆந் திகதி கண்காட்சிக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,023,791 தொகையான செலவு விளைவற்று இருந்தது. | அடுத்துவரும் ஆண்டுகளில் நடாத்தப்படும் கண்காட்சிகளுக்கான உடன் இணைவானவைகளுக்காக செலவு செய்வதற்கு அவசியம் ஏற்படாது. | அனைத்து செலவுகளும் திட்டமிடப்பட்டு தேவைப்பாட்டிற்கு இணங்க செலவு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| புதிய இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு குளிரூட்டி இயந்திரத்தினைப் பொருத்தும் ஒப்பந்தம் ரூபா 3,691,058 தொகைக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2020 செப்தெம்பர் 28 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1 ஆம் பிரிவின் பிரகாரம் இப்பெறுகைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்காததுடன் 2.8.1(ஈ) பிரிவின் பிரகாரம் கேள்வி மதிப்பீடான பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது. அதற்கிணங்க வழிகாட்டிக் கோவையின் 7.3.1(ஆ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காகக் கிடைத்த நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாததனால் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய ஆலோசனைப் பணியகத்தின் ஆலோசனையின் பிரகாரம் ஒரு வெளி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் போது கட்டிடம் முழுவதனையும் நிர்மாணிக்கும் நடவடிக்கைக்காகத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கம்பனி இக்குளிரூட்டி முறைமையை பொருத்துவதற்காகவும் தேவையான தொழில்நுட்ப சிபார்சுகளை | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மேற்பார்வை அல்லது வழிகாட்டுதல் இல்லாது ஆலோசகரினால் கேள்வி மதிப்பீடு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. பொறியியல் மதிப்பீடு ரூபா 2,501,400 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதியை 47.6 சதவீதத்தினால் மிகைத்து சமர்ப்பித்த அதிகூடிய கேள்வி விலைக்கு பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.3 ஆம் பிரிவிற்கு முரணாக ஆலோசகரினால் மேற்கூறிய ஒப்பந்தம் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. | வழங்கியிருந்தது. எனவே குளிரூட்டி முறைமையைப்ப பொருத்துவதற்காக தனியான ஒரு தொழில்நுட்பக் குழு நியமிக்கப்படவில்லை. |

## 3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர் 2020 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற 02 பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது பணிப்பாளர் சபை செயலாளராகச் செயற்பட்டிருந்தார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்படாது 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மாதம் ரூபா 30,000 வீதம் செலுத்தும் அடிப்படையில் 03 மாத காலத்திற்காக ஒப்படைப்பு அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | சபை செயலாளர் மற்றும் தலைவரின் பிரத்தியேக உதவியாளராக JM-1-1 தொகுதியிலுள்ள ஒரு பதவியை அங்கீகரித்துக் கொள்வதற்கு வரிசை அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அவ்வாறான ஒரு பதவியை அங்கீகரித்துக் கொள்ள முடியாது எனவும் சபைச் செயலாளர் பதவிக்காக மீண்டும் நி.பி 70 இன் கீழ் தனியான ஒரு வேண்டுதலைச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க முறைப்படியாக சேர்த்துக் கொள்ளப்படும் வரை பணிப்பாளர் சபைச் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்று உரிய ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாளர் பதவியில் செயற்படுவதற்காக பெறுகை முறைமையின் கீழ் வெளிநபர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) நிலையத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 116 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 85 ஆகவும் ஊழியர் பற்றாக்குறை 31 ஆகவும் இருந்தது. உள்ளபடியான பதவியணியினர் அங்கீகரித்த பதவியணியில் 73% ஆக இருந்ததுடன் அங்கீகரித்த பதவியணியில் 27% ஆன ஊழியர் பற்றாக்குறை யினுள் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 01 ஊழியரும் இரண்டாம் மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள முறையே 10, 14, மற்றும் 06 ஊழியர்களுமாகும். 2020 ஆம் ஆண்டின் போதும் இந்த ஊழியர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதவிகளுக்காக முறைப்படியாக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். | நிறுவனத்தின் குறிக்கோள்களைக் குறைக்காது நுட்பங்களை நிறைவேற்று வதற்காக அங்கீகரித்த மற்றும் போதியளனவான பதவியணியினர் களைச் சேர்த்துக் கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய வடிவமைப்பு நிலையத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் | கொவிட் தொற்று நோயின் காரணமாக செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு | திட்டமிட்டவாறு உள்ளகக் கணக்காய்வு |

| | | |
|---|---|---|
| கணக்காய்வுச் செயற்பாடுகள் 23 குறிக்கோள்களின் கீழ் காலாண்டு ரீதியாகத் திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் போதியளவாக அந்த அனைத்து துறைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் உள்ளகக் கணக்காய்வின் காண்புகளை நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்துவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 18 செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 27,358,000 கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 9,533,343 தொகை பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 17,824,657 தொகையான சேமிப்பும் 03 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 3,265,000 தொகையான நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 4,086,272 தொகை செலவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 821,272 மொத்த தொகையானது நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது. | 5 செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 8,979,290 தொகையானது ஒரு முரணாகக் காட்டியமை பின்வருமாறு சரி செய்யப்படுதல் வேண்டும். | பாதீட்டு மதிப்பீட்டு எல்லைக்குள் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |